

ஈழத்துமணித் திருநாட்டில் நாச்சிமார் கோவிலில் எழுந்தருளி இருக்கும்
வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பிகையினதும்,
வாலை அம்பாளினதும் அரவணைப்பில் வாழ்ந்த

அமரர் விஸ்வ குல திலகர் ஸ்ரீமான்

# கந்தசாமி சாந்தகுமாரன்

அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிட்ட

# சாந்தமலர்

23.10.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாள் துணை

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



**ஈழமணி திருநாட்டில் நாச்சிமார் கோயிலில் எழுந்தருளி இருக்கும் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பிகையினதும், வாலை அம்பாளினதும் அரவணைப்பில் வாழ்ந்த**

அமரர்

## விஸ்வ குல திலகர்

## ஸ்ரீமான்

# கந்தசாமி சாந்தகுமாரன்

**அவர்களின்**

**ஞாபகார்த்தமாக வெளியிட்ட**

# சாந்தமலர்

**23.10.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள்
குடும்பத்தின்
ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்புடனும்
பண்புடனும்
பாசத்துடனும்
எம்மையெல்லாம் வழிநடத்தி
இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட
எம் குடும்ப ஒளி விளக்கின்
பாத கமலங்களில்
இச் "சாந்தமலர்" எனும் நினைவு மலரினை
பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

" அம்பாள் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ "







மலர்வு
07.02.1952

உதிர்வு
23.09.2021

அமரர்

# கந்தசாமி சாந்தகுமாரன்

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ புரட்டாதி ஏழு வியாழன்தனில்
அபரபக்க திருதியை நன் நாளில்
சீர் பெறு கந்தசாமி சாந்தகுமாரன் - யாக்கை விட்டு
வாலை அம்மன் திருப்பாதம் பற்றிய நன்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே !!

## தேவாரம்

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில்பலி கொண்டுழல்வார்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீராட்டான துறை அம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

வேதநெறி தழைத்து ஓங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.க சாந்தகுமாரன் அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே......

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவபூமி எனஅழைக்கப்படும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியிலே விஸ்வ குலத்திலே புகழ்பெற்று வாழ்ந்து வந்த அமரர் திரு திருமதி. கந்தசாமி சரஸ்வதி தம்பதியினருக்கு 07.02.1952 ஆம் ஆண்டு சிரேஷ்ட புத்திரனாக சாந்தகுமாரன் பிறந்தார். இவருக்கு தேவகுமாரன், லிங்ககுமாரன் எனும் இரு சகோதரர்கள் உள்ளனர்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க இவர் தன் ஆரம்பக்கல்வியை யா/இந்து ஆரம்பப் பாடசாலையிலும் பின் யா/இந்துக்கல்லூரியிலும் கல்வியினைக் கற்றார். மேற்படிப்பிற்காக இந்தியா சென்று மோட்டார் பொறிமுறையாளர் கற்கையினை கற்று அங்கு TATA நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். தனது தந்தையாரின் வழிகாட்டலில் இந்தியாவில் வியாபாரங்கள் பலவற்றையும் செய்து வந்தார். அவ்வேளை சபரி ஐயனின் சிறந்த பக்தனும் ஆனார்.

விருந்தோம்பல் செய்து வாழும் பண்பில் சிறந்து விளங்கிய இவரது பெற்றோர் இவருக்கு நற்குணமுள்ள பண்புள்ள குணவதியை வாழ்க்கைத்துணையாக்க வேண்டுமென்று விரும்பி மட்டுவிலில் வாாழ்ந்து வந்த அமரர். முத்து சத்தியபாமா அவர்களின் ஏகபுத்திரி யாகிய சுப்புலட்சுமி என்பவரைத் திருமணம் செய்து வைத்தனர்.

பூவும் மணமும் போல வீணையும் நாதமும் போல இருவரும் சந்தோஷமாக இல்வாழ்வில் சிறந்து விளங்கினர். இல்லறவாழ்வின் சிறப்பு நன்மக்கட் பேறு என்றபடி காயத்திரி, கங்கா, சிவாஜினி, சாந்தினி, மணிகண்டன் , முகுந்தன் (அமார்), அபிராமி, செந்தூரன் எனும் நன்மக்களை பெற்றெடுத்தார்.

இவர் தனது தொழில் நிமித்தமாக வெளிநாடு (குவைத்) சென்று சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் இலங்கை வந்து யாழ். மாநகர சபையில் சாரதியாக பணிபுரிந்து வந்தார். தொடர்ந்து தீயணைப்பு சேவை பொறுப்பதிகாரியாகவும் (OSC) கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரி ஐயனின் பாதங்களில் சரணடைந்த
பதினெட்டாம் படி கண்ட குருசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இல்லாமல் தனது தந்தையாரின் குலத்தொழிலான பொற்கொல்லர் தொழிலையும் செய்து வந்தார். அனலைதீவு ஐயனார் கோவில் வேலைகளை தனது தந்தையின் வாக்குக்கு அமைய இவர் மேற்கொண்டு வந்தார். அத்தோடு எழுவைதீவு முருகன் கோவில் புளியந்தீவு சிவன்கோவில், மனோன்மணி அம்மன் கோவில் கொக்குவில் சாயி துர்க்கா கோவில் வேலைகளையும் செய்து வந்தார்.

இவரின் தந்தையின் இறப்பிற்கு பின்னர் அவரால் ஆதரித்து வந்த இல்லத்திற்கு அருகில் உள்ள வாலை அம்மன் ஆலயத்தினை இவர் பொறுப்பேற்று தனது இறை பணியினை செவ்வனே செய்து வந்தார். இவ்வாலயத்தின் பெருவளர்ச்சிக்கு இவரே முக்கிய காரணமும் ஆவார். அதில் சிறப்பாக பௌர்ணமி பூசை, அன்னதானம் என்பவற்றை ஆரம்பித்து வைத்தார்.

பிள்ளைகள் யாவரையும் சீரும் சிறப்புடனும் வளர்த்து கல்வி புகட்டி மணப்பருவம் அடைந்ததும் காயத்திரியை காந்தன் என்பவருக்கும் கங்காவை திருமாறன் (பிரபு) என்பவருக்கும் சிவாஜினியை சசிகுமார் (சசி) என்பவருக்கும் சாந்தினியை கீர்த்திசிங்கன் (கீர்த்தி) என்பவருக்கும் மணிகண்டனுக்கு திவ்யா என்பவரையும் அபிராமியை கோபிநாத் (கோபி) என்பவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

அவர்களது சிறப்பான வாழ்க்கையினை கண்டு களித்த இவர் பேரப்பிள்ளைகளாக சபரிஸ், லவராஜ், லக்ஸ்மி, மகாலக்ஸ்மி, தனுசன், பிரணவி, கஜனிகா, கிஷான், வர்ணஜா, தனுஸ்கரன், திருக்கார்திக், தருணிகன், குருபரன் என்பவர்களையும் கண்டுகளித்தார்.

இவர் தனது ஓய்வு காலத்தில் பல முக்கிய பிரசித்தி பெற்ற தலங்களுக்கு சென்றுவந்தார். குறிப்பாக இந்தியாவில் காசி, ஈஷா, வெள்ளையங்கிரிமலை, திருவண்ணாமலை (கிரிவலம்) போன்ற தலங்களை தரிசித்து வந்தார். அண்மையில் இலங்கையில் சிவனொளிபாதமலைக்கும் சென்று வந்தார்.

வையகத்தில் வாழ்வாங்கு பூரணமாக நிறைவு பெற்று மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் அன்பினால் நெகிழ்ந்து கண்ணீர் பூக்களை சொரிய திவ்வியத் திருநாளாகிய 23.09.2021 வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு திருதியை திதியில் இவ்வுலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாட எடுத்துக் கொண்ட பூத சரீரத்தை நீத்து புண்ணிய சரீரத்துடன் விண்ணுலகு சென்று ஐயனின் பாதம் சரணடைந்தார்.

திருவடி நிழலில் அமர்ந்து பேரா இன்பம் பெற்று சாந்தியடைய வாலையம்மன் அருள் புரியும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம். எம் தந்தை இறப்பினால் எம்மை பிரியவில்லை என்றும் எம் இதயத்தில் நீங்காது நிலை பெற்றிருப்பார் என்று பிரார்த்தனை செய்து சாந்தியடைவோமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*அன்னாரின் குடும்பத்தினர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் மனதில் உதித்த தாத்தா

அன்பின் வடிவமான எங்கள் தாத்தா
ஆலய வழிபாட்டு முறைகளை சொல்லித் தந்த எங்கள் தாத்தா
இனிமையாக பேசும் எங்கள் தாத்தா.
ஈகையை கற்றுக் கொடுத்த எங்கள் தாத்தா.
உண்மையை பேசக்கற்றுக் கொடுத்த எங்கள் தாத்தா.
ஊமைக்கு அருள் புரிந்த ஐயனை வழிபட கற்றுக்கொடுத்த எங்கள் தாத்தா
எங்களை விட்டு பிரிந்தீர்களே தந்தா
ஏங்குகிறோம் உங்கள் பிரிவினால் தாத்தா.
ஐந்தெழுத்து மந்திரத்தை சொல்ல கற்றுக் கொடுத்த தாத்தா
ஒழுக்கத்தை கற்றுக் கொடுத்த தாத்தா.
ஓய்வின்றி உழைப்பீர்களே தாத்தா.
ஔவியம் வேண்டாம் என்பீர்களே தாத்தா
நல்வழிகளை எனி எமக்கு யார் கற்றுக்கொடுப்பார் தாத்தா
தெய்வமாய் நின்று எங்களை வழிப்படுத்துக்கள் தாத்தா தாத்தா

வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம்
அதை வென்று முடித்தார் தாத்தா
காசி, ராமேஸ்வரம், சபரிமலை என பல
பயன்தரு தரிசனங்களை கண்டு வந்தார் தாத்தா
இன்று நம் சமுதாயத்தில் ஒழிந்து போன நமது
சமய மரபுகளை எமக்கு சொல்லித் தந்தார் தாத்தா
வாழ்க்கைக்கு பயன்மிகு அறிவுரைகளை
எமக்கு புகட்டினார் எங்கள் தாத்தா
எமது இந்து சமயத்திற்கு
உதாரணமாக திகழ்ந்தார் தாத்தா
இரப்பவர்க்கு இல்லையென்றாது
ஈகை செய்யும் எங்கள் தாத்தா
என் அன்புத் தாயை எனக்கு
கொடுத்த தாத்தா
தாத்தா நம்மை விட்டு பிரிந்தாலும்
எப்போதும் எம்மை நல்வழிப்படுத்தும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதி தோத்திரங்கள்



மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூபமஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமேஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே
சரணம் ஐயப்பா

## பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார் பிள்ளையார்
பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார் (பிள்ளையார்)

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்துவைக்கும் பிள்ளையார் (பிள்ளையார்)

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் (பிள்ளையார்)

அவல் பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார் (பிள்ளையார்)

கலியுகத்தின் விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார் (பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் தோத்திரம்



தில்லை அம்பல நடராஜா-உன்
திருவருள் வேண்டும் சிவராஜா
திருநீலகண்ட ஜெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கயிலையில் வாழும் கைலாசா
என் கருத்தினில் வந்திடு சுகவாசா
தோடணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்மா புரியோனே (தில்லை)

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேசா - என்
மனதில் இருப்பாய் மலைவாசா (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் பாடி



ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டிய பின்
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ (ஆயர் பாடி)

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர் பாடி)

நாக படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான் தாலேலோ
அவன் மோன நிலைகூட ஒருயோக நிலைபோலிருக்கும்
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ (ஆயர் பாடி)

கண்ணன் அவன் தூங்கி விட்டால் காசினியே தூங்கி விடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ
அவன் பொன்னழகை பார்ப்பதற்கும் போதை முத்தம் கேட்பதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ (ஆயர் பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பூர நாயகியே



கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேத வல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே நாகேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி
கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனலில் கருவாகி



கனலில் வருவாகி புனலில் உருவான
கந்தன் ஊர் எந்த ஊர் - 2
கணமும் மறவாமல் தினமும் நினைக்கின்ற
மனிதர்களின் சிந்தை ஊர் - 2 கனலில்

குன்றங்களில் கோயில் கொண்ட வடிவேலன்
கண்ட சுகம் என்னவோ -2
தொண்டர் பல பேரும் கொஞ்சும் தமிழ் பாடல்
தந்த சுகம் அல்லவோ கனலில்

உருகி அவன் பெயரை உரைக்கும் பலபேரும்
அடையும் பலன் என்னவோ -2
கருகி துயர் ஓட கவலை பறந்தோட
பெருகும் அருள் அல்லவோ கனலில்

அழகன் குமரன் நல்லாவினன் குடி தன்னில்
கிழவன் பெயர் கொண்டதேன் -2
பழகும் தமிழ் பாட்டி ஔவை மூதாட்டி
பழம் நீ எனச் சொன்னதால் -2
ஞானம் பழம் நீ எனச் சொன்னதால் கனலில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் பாடல்



ஆதிமூல நாதனே பால வைரவா
ஆதி சிவன் பாலனே வைரவா
திரிசூல நாதனே பால வைரவா
தில்லை நாதன் பாலனே பாலவைரவா

வடைமாலை தரித்தவரே பாலவைரவா
வரம் தந்து காருமையா பாலவைரவா
சுடலை நடனம் ஆடியவா ஞானவைரவா
சுத்தசிவமானவரே ஞானவைரவா

பிள்ளையாரின் தம்பியாரே பாலவைரவா
பிழைகள் எல்லாம் பொறுத்தருள்வாய் பாலவைரவா
வேலவனின் தம்பியரே ஞானவைரவா
வேதனைகள் தீர்த்திடுவாய் ஞானவைரவா

ஐயனாரின் அண்ணரே ஞானவைரவா
ஐயங்களை போக்கிடுவாய் ஞானவைரவா
சுவன வாகனம் கொண்டவரே பாலவைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞானவைரவா

வண்ணார்பண்ணை மீதமர்ந்த ஞானவைரவா
எம் கவலைகளை தீர்த்திடுவாய் ஞானவைரவா
உன்னடியார் துயர் தீர்த்த பாலவைரவா
உடன் இருந்து காத்திடப்பா பால வைரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலையில் மாலை



வெத்தலையில் மாலை கட்டுங்க மால கட்டுங்களே
உங்க வேதனையை சொல்லி சொல்லி மால கட்டுங்களே
துளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே
ராம தோத்திரத்த சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே (வெத்தலயில்)

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா
அவன் கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பானே
தினம் ராம நாம சாமி பேர பாடி நிற்பானே (வெத்தலயில்)

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புதசாமி
அவன் ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா
அந்த கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா (வெத்தலயில்)

பொட்டுவச்சு பொட்டுவச்சு பூசை செஞ்சாலே
அவன் எட்டுவச்சு வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே
அவன் மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே (வெத்தலயில்)

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு
எங்க கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதக்க கேளு
மனம் வெம்பி வெடிக்க தேவையில்ல நன்மை கையோடு (வெத்தலயில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு



கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு
நாங்க கார்த்திகை முதல் தேதி மாலை இட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி
நாங்க ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம் (கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறு படை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிகிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரியலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உம் மகிமை அறிந்தோமய்யா (கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவான் சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
அகமும் குளிரவே அழைக்கிறோம்
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் இல்லாமலே உன்நாமமே
வரணும் வரணும் ஐயப்பா
கருத்தினில் வருவாய் கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா
மகிஷியம் ஹாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுணவிலாசா சுந்தரரூபா
சரணம் சரணம் ஐயப்பா
கரிமலைவாசா பாபவினாசா
சரணம் சரணம் ஐயப்பா
ஆறுவாரமே நோன்பிருந்தோம்
பேரழகா உனைக் காண வந்தோம்
பாலாபிஷேகம் உனக்கப்பா
இந்தக் பாலனைக் கடைக்கண் பாரப்பா
முத்திரை தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா
உந்தன் பொற்பாத மலர்கள் எனக்கப்பா
தேவன் பாதம் தேவி பாதம்
திருவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன் திருப் பாதமப்பா
நெய்யபிஷேகம் உனக்கப்பா
உன் திவ்ய தரிசனம் எனக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா
அருள்செய்யப்பா மனம் வையப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடி கட்டு

இரு முடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
ஐயப்பா ஆ... சுவாமியே ஆ...
ஐயப்பா ஆ... சுவாமியே ஆ...
இருமுடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா - 2 (இருமுடி கட்டு)

தாயவள் தலை வலி தீரவே வரிப்புலி,
தேடியே சென்றான் மா மணிகண்டன்
வன் புலிகள் கூட்டம்
தனியாய் கூட்டி வந்தான் (இருமுடி கட்டு)

கானகம் போய்த் திரும்பி, கலியுக வரதனாய்
காட்சியும் தந்தான் மா மணிகண்டன்
விண்ணவர்கள் கூட்டம்
தன்னையே கூட்டி வந்தான். (இருமுடிகட்டு)

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

## இருமுடியை சுமந்து வந்தேன்

இருமுடியை சுமந்து வந்தேன் இரக்கமில்லையா
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா

அழுதையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா
அருகே ஓர் கால்லெடுத்தே வைக்கவில்லையா
கரிமலையில் ஏறிவந்தேன் காணவில்லையா - அந்த
கருடன் என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா

பம்பையில் குளித்து வந்தேன் பார்க்கவில்லையா
பம்பா நதி போஜனம் நீ அருந்தவில்லையா
பம்பையிலே விளக்கெடுத்தேன் காணவில்லையா
பகவானே உனக்கு கூட சாட்சி தேவையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா
நான் படித்தேங்காய் உடைத்த சப்தம் கேட்கவில்லையா
கொடிமரத்தை சுற்றிவந்தேன் காணவில்லையா
அங்கே கூடிநின்ற ஜனங்களைப் போய்க் கேட்டுப்பாரய்யா

நெய்யபிஷேகம் செய்தேன் நினைவுமில்லையா
நான் மெய்யுருகிப் பாடியதும் கேட்கவில்லையா
ஐயா உன் சரணமென்றே கூறவில்லையா
நீ விஸ்வமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லவா
இருமுடிப் பிரியனே சரணம்

## அம்மாவும் நீயே

அம்மாவும் நீயே
அப்பாவும் நீயே
அன்புடனே ஆதரிக்கும் ஐயனும் நீயே (அம்மாவும்)

தந்தைமுகம் தாயின் முகம் கண்டறியோமே
மன சாந்தி தரும் இனிய சொல்லை கேட்டறியோமே
எங்களுக்கோர் அன்பு செய்ய யாரும் இல்லையே
இதை அறியாயோ ஐயப்பா உன் கருணையில்லையோ
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா (அம்மாவும்)

பூனை நாயும் கிளியும் கூட மனிதர் மடியிலே
பெற்றபிள்ளைபோல் நல் உறவால் சேர்ந்து வாழுதே
ா எறும்பு உன்படைப்பில் இனிமை காணுதே
இதை அறியாயோ ஐயப்பா உன் கருணை இல்லையோ
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா (அம்மாவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமி சரணம் என்றால்

சாமி சரணம் என்றால் மன சாந்தி
கிடைக்கும் ஐயப்பா
சுவாமி நீரே அல்லால் வேறு கதியும்
இல்லை ஐயப்பா (2)

சரணத்தை சொல்வோம் மரணத்தை வெல்வோம்
சாமி சரணம் ஐயப்பா
இரு முடி பிரியனே ஈசன் குமரா
சாமி சரணம் ஐயப்பா (2)

சாமி சரணம் என்றால் மன சாந்தி
கிடைக்கும் ஐயப்பா
சுவாமி நீரே அல்லால் வேறு கதியும்
இல்லை ஐயப்பா (2)

வன்புலி வாகன வானவர் கூறிட
சாமி சரணம் ஐயப்பா
கலியுக வரதா கானக வாசா
சாமி சரணம் ஐயப்பா (2)
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா

## ஈசா சபரி மலை

ஈசா சபரி மலை ஈசா (2)
உன்னைக் காணாத கண் இல்லையே (2)
உன்னை மறப்பாரில்லை (2)
உன்னை வெறுப்பாரில்லை (2)
உன்னைக் கண்டாரும் எதிர்ப்பாரில்லை (2) (ஈசா சபரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான முகம் காட்டி அருள்வாயப்பா
சபரி வந்தாலும் உன்னைப் பாடும் சுகமேயப்பா
சுவையாலும் சுகம் காணும் உரு வேயப்பா
பாவம் தன்னாலே மறந்தோடும் இறைவா நீ வா (ஈசா சபரி)

புவி மீது அமர்ந்திட்ட புனிதா நீ வா
புவி தன்னில் காட்சிதரும் மன்னா நீ வா
இமையாலும் ஐயப்பா இறைவா நீ வா
திகட்டாத என்னுயிரே எனை பார்க்கவா (ஈசா சபரி)

## லாகி லாகி

லாகி லாகி லாகி லாகி இல்லல்லோ
வார் முகமது பேரெல்லோ
எரிமேனி நாங்கள் வந்தல்லோ
கரும் புள்ளி செம்புள்ளி இட்டல்லோ (லாகி லாகி)

மணிகண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி யானவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவரெ (லாகி லாதி)

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையில் தந்தவரே
எரிமேலியில் குடி கொண்டவரே (லாகி லாகி)

வீரமும் தீரமும் கொண்டவரே
எருமேலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீர்
கன்னிமார்களை காத்திடுவீர் (லாகி லாகி)

உன்னிடம் நாங்கள் வந்திடுவோம்
பேட்டையாடி துள்ளிடுவோம்
வாவருசாமி திந்தகத்தோம்
ஐயப்பசாமி திந்தகத்தோம் (லாகி லாகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சங்கோவில் அரசே

அச்சங்கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சை கொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன் மைந்தா
பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா

சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா

ஆரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா (சுவாமி)

மலைவீடும் சபரிமலை மன்னவனே வா
குறை தீர்க்கும் குளத்துப் புழை பாலகனே வா
மன்னவனே மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலி மேல் காட்சி தரும் வள்ளலே நீ வா (சுவாமி)

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதி மலை
நாவார உனை அழைத்தோம் சாமியே சரணம் ஐயப்பா (சுவாமி)

## பொய்யின்றி மெய்யோடு நெற்கொண்டு போனால்

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா : ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நாடு அவன் புகழ்பாடு புகழோடு வாழ
வைப்பான் ஐயப்பன் உன்னை புகழோடு வாழவைப்பான் ஐயப்பன்
இருப்பது காடு வணங்குவது நாடு
அவனை காண தேவை பண்பாடு (ஐயப்பாசுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைகள் போடு தூய அன்போடு பெயரோடு வாழவைப்பான்
ஐயப்பன் நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள் அருள் வேண்டும்
அன்பரை எல்லாம் வாழவைப்பான் (ஐயப்பாசுவாமி)

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா - ஐயப்பா சரணம் ஐயப்பா

## அலையும் மனதினிலே அமைதி தாராயோ

நிலாவில் ஒளிவீசும் நின்னுடைய
நீலவானம் ஐயா இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும்
உந்தன் நாமம் ஐயா (நிலா)

மலைகள் கடந்து வந்தோம்
ஐயப்பா மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலா)

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அடக்கிடவே என் வாழ்வில்
இன்பம் தாறாயோ (நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ (நிலா)

மீண்டும் இந்திரனை விண்ணவரின்
வேந்தன் ஆக்கி வைத்தாய்
வேண்டும் பொழுதெல்லாம் ஐயப்பா
வில்லுடன் வாராயோ (நிலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுராபுரி வதனா ஐயப்பா
மதன் மோகனனே வணங்கும்
குருமுனிவன் தன் மொழியால்
மகிழும் சிவமணியே (நிலா)

## சத்திய ஜோதி

சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு புரியுதையா
சாஸ்தா ஆலயம் தெரியுதையா
சங்கடமெல்லாம் மறையுதையா (சத்திய)

மாமலை ஏறிப் போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
சபரி காட்டில் நடக்கையிலே
சாந்தி நிறைந்து தோன்றுதையா (சத்திய)

பதினெட்டாம் படிகள் தாண்டயிலே
பக்தியும் எல்லையைத் தாண்டுதையா
பந்தளக் குழந்தையைப் பார்க்கையிலே
சிந்தையில் சொர்க்கம் தோன்றுதையா (சத்திய)

ஐயனை மனதில் நினைக்கையிலே
ஐயம் எல்லாம் மறையுதையா
மகரஜோதியைக் காண்கையிலே
மனதில் இன்பம் தோன்றுதய்யா (சத்திய)

ஓரடி பாரடியாய் நடந்து வந்தோம்
ஒவ்வொரு மலையாய் கடந்து வந்தோம்
இருமுடி தலையில் சுமந்து வந்தோம்
உன் திருவடி துணையென்று நாடி வந்தோம்
சரணம் சரணம் ஐயப்பா சபரி கிரீசா ஐயப்பா
சாந்த சொரூபா ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (சத்திய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பனுக்கு மலையுண்டு

அப்பனுக்கு மலையுண்டு கைலாயம்
அன்னைக்கொரு மலையுண்டு ஏழுமலை
அண்ணனுக்கு மலையுண்டு பழனிமலை
ஐயப்பா உனக்குண்டு சபரிமலை
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

என்னுடைய கழுத்து மணிமாலை
என்னுடைய கனவு சபரிமலை
என்னுடைய நாவு சரண மொழி
என்னுடைய வேதம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

எனக்குள்ளே இலட்சியம் சபரிமலை
எனக்குள்ளே இருப்பது சன்னிதானம்
எனக்குண்டு கதி பதினெட்டாம் படி
எனக்குண்டு மலைமேல் மகரவிளக்கு
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4

அப்பனவன் நாமம் நமசிவாய
அன்னையவள் நாமம் நாராயணா
அன்புத்தம்பி கோஷம் அரோகரா
ஐயப்பனின் கோஷம் சரணமய்யப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயன் அருள் உண்டு

ஐயன் அருள் உண்டு என்றும் பயம் இல்லை
போவோம் சபரிமலை
அந்த ஆதி சிவன் மைந்தன் ஐயப்பன்
என்றும் பக்தரைக்காப்பவனே
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

அழுதையில் மூழ்கி கல்லும் எடுத்து
கல்லிடம் கொண்டு வந்தேன்
அந்தக்கல்லிடம் குன்றில் கல்லினைப் போட்டு
கரிமலை ஏறி வந்தோம்
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

பொன்னம்பலத்தில் தைமாதத்தில்
ஜோதியாய் காட்சி தந்தாய்
எங்கள் எண்ணம் பலித்தது மனமும் நிறைந்தது
மணிகண்டப்பெருமானே
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

பந்தள நாட்டு ராஜகுமாரா
பஞ்ச கிரிவாசா (2)
சந்தனம் வைத்து வந்தனம் செய்தோம்
சபரிமலை நாதா (2)
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)
ஐயன் அருள் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பை நதிக்கரையே

பம்பை நதிக்கரையே உந்தன்
பெருமைக்கு இணை இல்லையே
அரிகரன் திருவருளே நீதான்
அறிந்தாய் முதன் முதலே (பம்பை)

ஆயிரம் கோடி பக்தர்கள் பாடி
தொழுவார் ஐயப்பன் திருவடியில்
அந்த ஐயப்பனே ஒரு குழந்தையின் வடிவில்
அருள்மழை பொழிந்தது உன் மடியில்
அருள்மழை பொழிந்தது உன் மடியில் (பம்பை)

அடைக்கலம் என்று இருமுடி ஏந்தி
அவரவர் மனதில் அருளாய் இறங்கி
கருணையை பொழிவான் வாழ்வினிலே
அனுதினம் வருவார் கோவிலிலே
கருணையை பொழிவான் வாழ்வினிலே (பம்பை)

சரணம்பாடி வருவோர்க்கெல்லாம்
சாந்தியை கொடுக்கும் சபரிமலை
ஒருமுறை தரிசனம் கண்டால் போதும்
பிறவியின் பயனே தெய்வநிலை
பிறவியின் பயனே தெய்வநிலை (பம்பை)

## மூனுகண்ணுத் தேங்கா

சுவாமியே சரணம் ஐயப்பா
நெய்யபிஷேகம் பிரியனே சரணம் ஐயப்பா

மூனுகண்ணுத் தேங்காய் அதில் நெய் நிரப்பி வைத்து
அந்த ஐந்துமலை ஏறி அவன்பாதம் பணிந்திடனும் (2)
ஏற்றிடு ஏற்றிடு எங்கள மேலே
நம்பிக்கை வைத்தோம் உன்னருள் மேலே (2)
வேண்டிட வேண்டிட வந்தருள்வாயே
மோகன சுந்தரனே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதியே ஜோதியே ஐயப்பா ஆனந்த ஜோதியே ஐயப்பா
பம்பா விளக்கே ஐயப்பா சரணம் உனக்கே ஐயப்பா

தாங்கும் இருமுடிதான் அது ஐயன் திருவடிதான்
விதி பாரம் குறைந்திடும் தான் நம்ம பாவம் மறைஞ்சிடும் தான்
சொல்லுங்க சொல்லுங்க ஐயனின் நாமம்
சொல்லிட சொல்லிட வந்திடும் யோகம்
கல்லென்ன முள்ளென்ன காடென்ன மேடென்ன
நாதன் இருக்கையிலே (ஜோதியே)

கரிமலை ஏறி நாம இறங்கிடும் போது
நம்ம கரிகரன் தானே வந்து கைகொடுப்பானே
ஐயனின் சக்தியை வந்திங்க பாரு
சொன்னது சொன்னது சத்தியம் பாரு
நாளென்ன பொழுதென்ன வினையென்ன செய்யும்
ஐயன் இருக்கையிலே (ஜோதியே)

தூய பதினெட்டுப் படியில் பாதம் பாடும் போது
வரும் துன்பம் நொடியினிலே
நம்மை விட்டுப் பறக்குதையா!
கற்பூர ஆரார்த்தி காட்சியைப்பாரு
சத்திய மூர்த்தியின் கீர்த்தியைப்பாரு
ஆதியும் நீதியும் ஜோதியுமாகி வாழும் குருபரனே. (ஜோதியே)

காந்தமலையிலே நம்ம சாந்த மகராசன்
அந்த வான்வெளி தனியே ஒரு ஜோதியாய் வந்தானே
ஆயிரம் ஆயிரம் சூரியன் அங்கே
பாருங்க பாருங்க ஐயனை அங்கே
பார்த்திட பார்த்திட கன்களும் கோடி தந்திடு என் ஐயனே (ஜோதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஜனம் செய்திட வாராயோ

போஜனம் செய்திட வாராயோ - 2

தவ ராஜனே சபரி வாசனே மலை கடந்து
போஜனம் செய்திட வாராயோ
கன்னிமார் நடத்தும் அன்னதான மலர் பூஜையில்
போஜனம் செய்திட வாராயோ

சுவாமியே சரணம் ஐயப்ப
சரணம் சரணம் ஐயப்பா - 2

நாவில் கரைந்திடும் பால் பணியாரம்
மாவில் நெய் பிடி அறுவகை லாடும்
பூவினும் மெல்லிய வெண்பணியாரம்
மாநிறம் தருகிற மோதக வகையும்
முழங்கை வழிந்திடும் அத்தார அரிசலும்
குழந்தைகள் விரும்பிடும் சிறு மணி பூந்தியும்
சிறு சிறு கிண்ணத்தில் இட்ட அன்னங்கள்
மொறு மொறு வடகம் ஆவறு அகங்கள்
மணக்க மணக்கவே இன்னும் பல பண்டங்கள்
விருந்தை சிறப்பிக்கும் வித வித கறிகள்

இவை யாவும் செய்து படைத்துட ஆசை
ஏதோ முடிந்ததை உடமக்களித்தோமே
கம்பன் குடி சென்றது போல் வருவாயே பகவானே
அன்னம் உண்டு அன்பை எழுதி தருவாயே
ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா - 2

போஜனம் செய்திட வாராயோ

அவியல் துவையல் ஏழு வகைப் பொரியல்
அச்சடி கிச்சடி பருப்பு உருண்டை
எறுதேறி உப்பேறி இடியஞ்சக்கை
எண்ணதும் இனிக்கும் முன்னி அப்பமும்
சொன்னதும் ருசிக்கும் சொஜ்ஜி மொத்தமும்
மன்னரும் சுவைக்கும் மனோகரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னவே மயக்கும் தேன் குழல் வகையும்
உள்ளமே விரும்பும் வெள்ளை சீடையும்
மெல்லவே கரையும் மைசூர் பாகும்

இவை யாவும் செய்து படைத்திட ஆசை
ஆனாலும் நாங்கள் ஏழை அன்றோ
ஏழைக்கேற்ற சிற்றுண்டி செய்தோமே பகவானே
எடுத்து உண்ண வர வேண்டும் பெருமானே
ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா - 2
போஜனம் செய்திட வாராயோ

## கன்னிமூல மகா கணபதி

கன்னிமூல மகா கணபதி பகவானே கார்த்திகை மாதம் துளசி மாலை அணிந்தேனே. நாற்பத்தெட்டு நாட்களுக்கு நோன்பு கொண்டேனே சுவாமி சரணம் சுவாமி சரணம் சொல்லி வந்தேனே....(2)

பதினெட்டாம் படிமேல் வாழும் பூதநாத சதருந்த சர்வ பூத தயாபர சுவாமி ஐயப்பா ரஷ்ச ரஷ்ய மகா பாவு சாஸ்தேயம் துத்யம் ருமோமஹ ஐயப்ப சுவாமி சரணம் ஐயப்பா (2) (கன்னிமூல)

எங்க குருநாதனே எங்க குல தெய்வமே எங்க குறை தீர்த்து வைப்பாய் சரணம் ஐயப்பா வில்லாளி வீரனே வீரமணிகண்ட வன்புலிமேல் பவணிவந்தாய் சரணம் அப்பா ஐயப்பா (2)

எல்லாம் வல்ல இறைவா என் மனதில் நீ இல்லை குறைவா என்று சரணம் சொல்லி சத்தியம் கொண்டு சபரி மலைக்கு வந்திடுவோம். (2)

(கன்னிமூல)

பள்ளிக்கட்டை ஏத்திக்கிட்டு பக்தியுடன் நடந்துகிட்டு பேட்டை துள்ளி ஆடி வந்தோம் சரணம் அப்பா ஐயப்பா வந்த இடம் கல்லு முள்ளு இருந்தாலும் சரணம் சொல்லு சொன்ன சொல்லு ஒரு நாளு எங்களை வெல்லும் பல நாளு (2) சபரிகிரிநாதனே ... வருவோம் உன் பாதமே ...(2) எல்லாம் (கன்னிமூல 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைபுலி ஆடிவரும்

ஆனை புலி ஆடிவரும் காட்டிலே
ஒரு அந்தரான பொன்னம்பல மேட்டிலே
விளக்குருபம் கொண்டு விளையாடி வரும் ஐயப்பா
கன்னிமாரு எங்கமுகம் பாரப்பா
எங்க விரதத்திலே வந்து விளையாடப்பா சரணம் சரணம்...

கார்த்திகைதான் பிறந்துவிட்டால் கூடுகிறோம்
ஒரு கடனை உடன வாங்கி மாலை போடுகிறோம்
தலை வணங்கும் பயிரைப்போல குருவடியை நாடுகிறோம்
குருவடிவில் காட்சிதரும் தெய்வமே
எங்க விரதத்தில் வந்து துணை செய்யுமே சரணம் சரணம்...

கறுத்த தலையும் நரைச்சு போகக் கூடுமே
சபரிகாடு ஏறும் ஆசை நரைத்து போகுமோ
தன்நந்தனி தவமுனி ஆனசாமி ஐயப்பா
கன்னிசாமி விரதத்திலே நுழையனும்
கண்ணியத்த புண்ணியத்த விதைக்கனும் சரணம் சரணம்....

பிரம்மனாரு எழுதிவைச்சு தலைவிதி
அதைப்புரட்டிப் போடும் ஐயா உன் இருமுடி
கட்டுமுடி கட்டுபடி ஏற்றிவிடும் ஐயப்பா
நாற்பது நாள் மனிதனாக வாழனும்
அது மலைக்குப் போயும் மறுபடியும் தொடரனும் சரணம் சரணம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பண்ண சாமி

கருப்பண்ண சாமி - ஐயா கருப்பண்ண சாமி
சங்கிலிக்காரன் ஐயா கருப்பண்ண சாமி

வெள்ளைக் குதிரையேறி வாராரே
எங்கள் குல தெய்வத் தோழன் கருப்பனே
காடு மேடு தாவி வாராரே
எருமேலி கோவக்காரன் கருப்பனே
வேட்டையுமாடி பேட்டையும் துள்ளி வீரமாய் வந்தானே
ஆதியுமாகி ஜோதியுமாகி பாதையாய் நின்றானே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம் சரணம் சரணம் சரணம், ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

கறுத்த வைரமே - ஐயா கருப்பண்ண சாமி
கருப்பு சகரமே - ஐயா கருப்பண்ண சாமி
கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
சிங்க நடைபோட்டு வாராரோ
நீலிமலைத் தோப்புக்காரன் கருப்பனே
புலிகள் புடை சூழ வாராரே
காந்தமலை கூத்துக்காரன் கருப்பனே
பெரியானை வட்டம், சிறியானை வட்டம் வேட்டைக்கு வாராரே
சந்திரன் போல, சூரியன்போல கோட்டைக்குப் போவாரே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம், ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

வேட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
அலு சலங்கை சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
காட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
எங்க பாட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி

அண்டம் கிடுகிடுங்க வாரானே
அப்பாச்சி மேட்டுக்காரன் கருப்பனே
வானம் கிடுகிடுங்க வாரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புக் கோட்டைக்காரன் கருப்பனே
ஆட்டத்தை ஆடி, கூட்டத்தைத் தேடி காவலனாய் வாரானே
ஆனந்தமாகி தாண்டவமாடி காவலாய் நின்றானே

சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம், ஐயப்பா சரணம்,
சரணம், சாமி சரணம், சரணம், சரணம்

(கருப்பண்ண சாமி)

கருப்பு .... கருப்பு..... - கருப்பு..... - கருப்பு (கருப்பண்ண சாமி)

கறுப்பு சட்டையே - ஐயா கருப்பண்ண சாமி
அது முரட்டு மீசையே - ஐயா கருப்பண்ண சாமி
பட்டையக்காரனே - ஐயா கருப்பண்ண சாமி
எங்க பந்தக்காரனே ஐயா கருப்பளர்ண சாமி
அழுதா மலையே வாரானெ
அங்க மலைக்காத்துப் போல கருப்பனே
கரிமலை இறக்கம் ஓடி வாரானே
ஆனமலை வேட்டுக்காரன் கருப்பனே
சாமிகளோடு சந்தனமாகி சாட்சியும் சொன்னானே
சந்தனத்தோடு குங்குமத்தோடும் காட்சியும் தந்தானே
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம்,
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம், ஐயப்பா

(கருப்பண்ண சாமி)

மகர ஜோதியே - ஐயா கருப்பண்ண சாமி
மனச உருக வைக்கிறியே - ஐயா கருப்பண்ண சாமி
ஐயா கருப்பண்ண சாமி - ஐயா கருப்பண்ண சாமி
பதினெட்டுப்படிவீரன் வாரானே கொடிமரக் காப்புக்கட்டி கரப்பனே
சரங்குத்தி ஆட்டமாடி வாரானே - பெரிய பாதையழகன் கருப்பா

(கருப்பண்ண சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஐயப்பன் 108(சரணம்)



| | |
|---|---|
| ஓம் கன்னிமூல கணபதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அன்னதானப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைவணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழை பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையில் பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறை தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சிணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலி வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இரு முடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்ய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும்ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரருளே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பேரூர்த்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதைமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றமே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதித் தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திரிவேணி சங்கமே சரணம் ஐயப்பா
ஓம் திருராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திருஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பலவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருப்பம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சி குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ணசாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய்யபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புரத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினி குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

**கவசம்**

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே. (1)

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே (2)

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக (3)

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணியமூர்த்தியே வருக வருக (4)

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக (5)

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக (6)

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருகவருக (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினென்படியை மனதில் நினைக்க
பண்ணி பாவம் பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே (8)

சபரிகிரீசனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே கூறிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே (9)

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்க ளெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் (10)

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீ சா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (11)

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாராயணன் பாலன் நாசியைக் காக்க (12)

இருமூர்த்தி மைந்தன் என் இரு செவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க (13)

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கயைக் காக்க (14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க (15)

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா தொடையினைக்காக்க (16)

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க (17)

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க (18)

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க (19)

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க (20)

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழித்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க (21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் (22)

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் (23)

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்றும் காப்பாய் எரிமேலி தேவா (24)

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா (25)

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச்சர்யமெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் (26)

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம் லோகம் துன்மார்க்கம் அல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் (27)

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய்யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ (29)

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ (30)

சரணம் சரணம்சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரயம் ஸ்வாமியே சரணம் (31)

(பிரம்மாண்ட புராணத்தில் கேரளீய மஹா த்மியத்தில் ஸ்ரீ பரசுராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம சாஸ்த காயத்ரி

பூத நாதார வித்மஹே
பவநந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தா ப்ரசோதயாத்

சாஸ்தா பஞ்ச ரத்னம்
ஸ்ரீ சாஸ்தா அஸ்டகம்

மூஷிக வாசன மோதக ஹஸ்த
ஜாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரஹ்காரம் விபும்
பர்வதி ஹருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

விப்ரபூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்பொப்ரியம் ஸ/தம்
ஷிப்ர ப்ரலாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

மத்த மாதங்க கமனம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸ்ர்வ விக்னஹரம் தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேஸ்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரசாதாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

பாண்யேச வம்ஸதிலகம்
கேரள கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்ய ஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

பஞ்சரத்னாக்கியமே தத்யொ
நித்யசுத்தப்படேன் நரஹா
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தா வசதி மானஸே

(சாமியே சரணம் ஐயப்பா)

ஶ்ரீ பூத நாதா சதானந்த
ஸ்ர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாஹோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ

(சாமியே சரணம் ஐயப்பா)

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் நாங்கள் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக்காத்து இரட்சிக்க வேண்டும். - ஓம் ஸ்ரீ சத்தியமான பொண்ணு பதினெட்டாம் படி மேல் வாழும். ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா. காசி ராமேஸ்வரம். பாண்டி. மலையளம் இலங்கை யாழ்ப்பாணம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்பன் சுவாமியே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை. மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸாஸ்தா ஆராத்தி தீபமங்களம்

01. தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய மங்கள லீலா நமோ நமோ
தேவகுஞ்சரி பாலா நமோ நமோ - அருள்தாராய்

02. ஆர்யலம்ஷ சுஜாதா நமோ நமோ
வீர்ய திவ்ய விலாசா நமோ நமோ
ஸாஸ"வ தாள் குரு தேவா நமோ நமோ - பஹகோடி

03. பூதவந்திதா தேவா நமோ நமோ
பீதி நாஎன ரூபா நமோ நமோ
மோஹனாம்புஜ பாதா நமோ நமோ - மணிகண்டா

04. ராஜசோள வீரா நமோ நமோ
வாஜவாசன வாஹா நமோ நமோ
நீத நிருத்ய விநோதா நமோ நமோ - வீராதி வீரா

05. கோர ராம விஞஷா நமோ நமோ
வார நூபுரதாரி நமோ நமோ
ஸ்ஜோதி சாந்சிதிபடா நமோ நமோ - ஜயசீலா

06. த்யதன மங்கள ரூபா நமோ நமோ
தான சுந்தர வாசா நமோ நமோ
வாச வாள் சதர தேவா நமோ நமோ - நிர்லா தாஸா

07. காந்த ஸ்துங் நிவாஸா நமோ நமோ
காந்திக தேவா நமோ நமோ
தேவவந்ய கிரீசா நமோ நமோ - பரதேவா

08. மூலமந்த்ர சொரூபா நமோ நமோ
யத்ஹமூவா நமோ நமோ
புத்ரதாயக தேவா நமோ நமோ - வர பாலா

09. கேசவ சூனோ நமோ நமோ
பாஷஜன்ம விநாஸா நமோ நமோ
ஆர்த்தி நாஸனமூர்த்தே நமோ நமோ - திவ்யரூபா

10. தீபமங்கள ஜோதி நமோ நமோ
தூயசபரி கிரீஸா நமோ நமோ
பூரணை புஷ்கலை நாதா நமோ நமோ - அருள் தாராய்
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரிவ ராஸனம்
## சுவாமியே யைப்பா

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

ஹரிவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோஹனம்
ஹரித தீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

சரண கீர்த்தனம் ஸ்வாமி சக்தமாசனம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ப்ரணய ஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்
ப்ரணத கல்பம் ஸ்வாமி சுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

துரக வாஹனம் ஸ்வாமி சுந்தரானனம்
வரகதாயும் ஸ்வாமி வேதவர்ணிதம்
குரு க்ருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிணயனம் பிரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிசத பூஜிதம் ஸ்வாமி சிந்தி தப்பிரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி வேமாஸ்ரயே

பவபயாபஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
த்வள வாரணம் ஸ்வாமி திவ்யவா ஹணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ச்ரித ஜனப்பிரியம் ஸ்வாமி சித்திரப்தம்
சுருதி விபூசணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதலாலயம்
ஹரிஹரர்த்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

## மங்களம்

பஞ்சாத்ரீஸ்வரி மங்களம் ஹரிஹரப் பிரேமாறுதே மங்களம்
பிஞ்சாலங்க்றுத மங்களம் ப்றணமதாம் சிந்தாமணி மங்களம்
பஞ்சாஸ்யத்வஜ மங்களம் த்றிஜகதாமாத்யப்பிறபோ மங்களம்
பஞ்சாஸ்த்றோபம மங்களம் ஸ்றுதிசிறோலங்கார சன் மங்களம்

ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மாமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கே மங்களம்

தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்

சிவன்மகனாம் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்

இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்

புவிவிசையில் பவனிவரும் புனிதனுக்கு மங்களம்

புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்

அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்

அழகேவுருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்

வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்

வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்

பம்பை நதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்

பந்தளம்மேல் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்

வண்ணார்பண்ணை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்

வண்ணை தனை காத்தருளும் ஐப்பனுக்கு மங்களம்

மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்

மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்

நித்திய சுப மங்களம்

நித்திய சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சடகோப ராமானுஜ ஐயப்ப பக்த சபை
## திருவாபரண குழு
## இலங்கை - யாழ்ப்பாணம்.



7/4, [illegible]
யாழ்ப்பாணம்.

பதிவு இலக்கம் : DHA/SGS/JA/064

Tel : 0212219191,
0777917753.

Date ..........

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலையம்பதி புளியந்தீவு அருள்மிகு
# ஸ்ரீ நாகேஸ்வரன் (சிவன்)
# திருக்கோவில் பிரதம குரு வழங்கிய இரங்கலுரை

## நாங்கள் கண்ட மகான்

யாழ்ப்பாணம் K.K.S வீதி (தட்டாதெரு) வண்ணை குளங்கரை மருதடி காமாட்சி அம்பாள் நாச்சிமார் கோவிலடி மதவடியை வசிப்பிடமாகக் கொண்டவர். அன்பிற்கும் பக்திக்கும் இணையான விஸ்வபிரம்ம குலத்தில் பிறந்தவர் திரு. அமரர் கந்தசாமி சாந்தகுமார். எல்லாராலும் அன்பாக பத்தர் ஐயா என அழைக்கப்படுவார். அவர் எங்கள் கிராமத்தில் உள்ள அனைத்து ஆலயங்களின் சுவாமிகளின் ஆபரண வேலைகள் சிறப்பாகச் செய்தவர். தன்னை மதித்து மக்களின் அன்பைப் பெற்ற மாமனிதர். திடீரென சுகயீனமுற்று அவர் குலதெய்வமான வாலாம்பிகையின் பாதத்தை சென்றடைந்துள்ளார். அவரின் இழப்பு ஈடு செய்யமுடியாதொன்றாகும். அவர்கள் குடும்பத்தாருக்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் நாகேஸ்வரனின் பாதம் பணிந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

சிவஸ்ரீ வெ. நாராயணக்குருக்கள்
புளியந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அவர்கள் தீயணைப்புச் சேவையில் பணி புரிந்த போது......

அமரர் கந்தசாமி சாந்தகுமார் அவர்கள் நான் யாழ் மாநகர சபையில் பணியாற்றிய காலத்தில் சாரதியாக இணைத்துக் கொண்டார். இவருடைய பணித்திறனாலும் இனிய சுபாவங்களினாலும் பணியாளர் மத்தியில் மிக விரும்பத்தக்க ஒருவராக இருந்தார். சைவ போசனம் உண்பவராகவும் நல்ல பக்திமானாகவும் இவர் மிகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் வாழ்ந்து வந்தார். ஐயப்பன் பக்தனாக விளங்கிய சாந்தகுமார் அவர்கள் வருடாந்தம் யாத்திரை போவதிலும் ஐயப்பனிடம் போகின்ற வழக்கத்தை மட்டுமல்லாது தன்னுடன் ஐயப்ப பக்த குழாமையும் கூட்டிச் செல்வது இவரது பழக்கமாக இருந்தது. ஐயப்பன் மலை உச்சியில் இருந்து என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியது என்னுடைய வாழ்க்கையில் பெரிய பாக்கியமாக கருதுகின்றேன்.

1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது அவர் வைத்திருந்த 'சோமா செற்" Car இல் அடிக்கடி பயணிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மேலும் எமது கிராமத்து ஐயனார் கோயில், எழுமங்கை நாச்சிமார் கோயில் உட்பட சகல கோவில்களுக்கும் அவ்வப்போது வருகை தருவது இவரது வழக்கமாகும். அனலை ஐயனாருடைய தேர்த் திருவிழாவிற்கு தவறாமல் இவர் சமூகமளிப்பார். அன்னாருடைய மறைவு மிகவும் துரதிஷ்டமானது. ஐயப்பன் காலடியில் அன்னார் அமைதியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாருடைய இழப்பால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மனம் சாந்தி பெற என்னுடைய பிரார்த்தனைகள்.

**வே. பொ. பாலசிங்கம்**
**முன்னாள் ஆணையாளர்**
**யாழ் மாநகர சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடகோப இராமானுஜ சுவாமிகளின் இரங்கல் வார்த்தைகள்.

சடகோப இராமானுஜ ஐயப்ப பக்த சபையின் குருநாதர் திரு.பாலாஜி இராமானுஜம் எனும் நான் எழுதுறேன். கிட்டதட்ட 40.50 ஆண்களுக்கு மேலாக எமது சபையின் மூத்தவரும் மூப்பருமாக இருந்தவர் சாந்தாசாமி. என்னுடைய பாட்டனார் சடகோபஇராமானுஜம் அவர்களுக்கும் அவருக்கு பின் வழி வந்த அவரது புதல்வரும் எனது பெரிய தந்தையும் ஆகிய ச.இரங்கராமானுஜ சாமிகளுடனும் மாறா பற்றும் அன்பும் மரியதையும் கொண்டிருந்து. சபைக்கு அடிப்படை உறுப்பினர் முதல் குருசாமி வரை அனைவரிடமும் அன்பாக பேசக்கூடியவர். பண்புக்கு இலக்கணம் பாசத்திற்கு அடித்தளம். எங்கு சென்றாலும் ஒரு பணிவு. பேசும் போது சாந்தா சாமி என்றால் சாந்தம் என பொருள்படும் வகையில் சாந்தமாக தான் பேசுவார். அதிர்ந்து பேசி நான் கண்டதே இல்லை. அவருடன் எனது பயணம் என்பது கிட்டத்தட்ட 30-35 ஆண்டுகளுக்கும் மேலானது. அவர் காசி இராமேஸ்வரம் திருப்பதி போன்ற பல தலங்களுக்கு யாத்திரை செல்வார். சிவன் மீது மாறா பற்று கொண்டவர். சபையில் நான் வயதில் மூத்தவர் குருசாமி என்று பாகுபாடு பாராமல் அனைவருடனும் சகஜமாக பேச கூடியவர். நான் இலங்கைக்கு சென்றிருந்த போது அவரது பழங்காலத்து கார் ஒன்றில் பல தீவுகளில் உள்ள கோயில்களுக்கு எனை அழைத்து செல்வார். அவர் எனக்கு அளித்த விருந்தோம்பல் போன்று வேறு கண்டதில்லை. விருந்தோம்பலுக்கு சாந்தா சாமியை தவிர வேறு எவரும் இல்லை. நேற்று இரவுதான் இச் செய்தி கேட்டு நெஞ்சமெல்லாம் துயரில் ஆழ்ந்தது.இப்படி ஒரு மனிதரை இறைவன் எடுத்து கொண்டான் என்று என் மனம் துடி துடித்தது. இருந்தாலும் மரணத்தை என்ன செய்வது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனையும் ஐயப்பனையும் நமதுபெரிய குருநாதரையும் மனதார பிரார்த்திக்கிறேன். அன்னாரின் குடும்பத்தினுரும் ஆறுதல் அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

*வாழ்க சாந்தாசாமியின் புகழ் வழர்க அவ ரது சிந்தனை*

*நன்றி*

*இப்படிக்கு குருநாதர்*
*திரு. பாலாஜி இராமானுஜம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**அமரர் அவர்கள் மாநகரசபை**
**தீயணைப்பு சேவையில்பணியில் இருந்த போது......**

எமது யாழ் மாநகர தீயணைப்பு சேவையின் தீயணைப்பு பொறுப்பதிகாரியாக 1990 ஆம் ஆண்டு முதல் 2012 வரை கடமையாற்றி ஓய்வு பெற்ற அமரர் கந்தசாமி சாந்தகுமாரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு சொல்லெனாத்துயரம் அடைகிறோம்.

அமரர் அவர்கள் தமது சேவைக்காலத்தில் சிறந்த தீயணைப்பாளராக, இயந்திர இயக்குனராக,சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்ட பொறுப்பதிகாரியாக இருந்து எம்மை வழிநடத்தியதோடு தமது குலத்தொழிலான பொற்தொழிலும் அதற்கு நிகராக இயந்திர பொறியியலிலும் சிறந்த விற்பன்னராக திகழ்ந்ததோடு தீயணைப்பு வாகனத்தின் மதி நுட்பமான திருத்தங்களையும் மேற்கொண்டவர்.

ஓய்வு பெற்று பல வருடங்கள் ஆனாலும் எமது அலுவலகத்திற்கு வந்து தேவையான ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கி எனக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கினார். இப்பன்முக திறமை கொண்ட அமரரின் இழப்பு எமக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

**அமரரின் ஆத்மா சாந்தியடைய மனமார வேண்டுகின்றோம்.**

**ஓம் சாந்தி,சாந்தி, சாந்தி...**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. காயத்திரி காந்தன்
அவர்களின் அன்பு தந்தை

**திரு.கந்தசாமி சாந்தகுமாரன்**

அவர்கள்
23.09.2021 அன்று
இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (7997)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சுவாமியே - சரணம் ஐயப்பா!

# ஐயனுடன் ஐக்கியமானார்



யாத்திரை பெரியஸ்வாமி

விஸ்வப்பிரம்மஸ்ரீ

## சாந்தகுமாரன் ஸ்வாமி

07.02.1952 23.09.2021

அவர்கள் ஐயன் ஐயப்பனோடு

இரண்டறக் கலந்து

ஜோதிரூபமானார்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2693)

**மூளாய்**
**077 727 9238**

சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு சார்பில்

**தங்க. முகுந்தன் (குருஸ்வாமி)**

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய தர்மகர்த்தாசபை செயலாளர் அவர்களின் தந்தையும், மகாசபை உறுப்பினருமாகி

அமரர் **கந்தசாமி சாந்தகுமார்**

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்து. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது இரங்கலை தெரிவிக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை**

**யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**

**(நாச்சிமார் கோவில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது உடன்

பிறவா சகோதரர்

## திரு.கந்தசாமி சாந்தகுமாரன்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(82695)

**ரூபி ஜுவல்லறி - உரிமையாளர்கள்**

**இல. 227 - 229 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

# கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற யாழ் மாநகரசபை தீயணைப்பு பொறுப்பதிகாரி

## அமரர் கந்தசாமி சாந்தகுமாரன்

தோற்றம்
07.02.1952

மறைவு
23.09.2021

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பிரிவால் துயருறும் : பொறுப்பதிகாரி, தீயணைப்பு உத்தியோகத்தர்கள்**
**யாழ் மாநகரசபை தீயணைப்புச் சேவை**



அமரர்

## கந்தசாமி சாந்தகுமார்

தீயணை பிரிவில் கடைமை ஆற்றியவர் (OSC)

தோற்றம்
01.02.1952

மறைவு
23.09.2021

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

யசோ குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் எங்கள் நெஞ்சம்
## நெகிழ்ந்த நன்றிகள்....

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"


எம்மனதில் நீங்காத நினைவலையாய் வாழ்ந்த 23.09.2021 அன்று சிவபாதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கந்தசாமி சாந்தகுமாரன் அவர்களின் இறுதிச்சடங்கின் போது உடன் நின்று ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபங்களை, இரங்கல் செய்திகளை அனுப்பியோருக்கும், தொலைபேசி, முகநூல் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும் மற்றும் அவருடைய பிரிவுச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவி செய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் பல நவின்று நிற்கின்றோம்.

*555/3 கே.கே.எஸ் வீதி,*
*நாச்சிமார் கோவிலடி,*
*மதவடி லேன்,*
*யாழ்ப்பாணம்.*

என்றும் நன்றியுடன்...
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்சாவழி




*அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print at : Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org